**I.D.O.P. No. 287/2019**

**22.11.2023**

சாட்சி

ம.த.சா. 1- திருமதி. மெர்சி, த/பெ. விஜயன்

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.</u>

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை .</u>**

எங்களது திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு நடைபெற்றது. எங்களது நிச்சயதார்த்த செலவுகளை எனது பெற்றோர் வீட்டில் செய்தார்கள். திருமண செலவை இருவீட்டாரும் சேர்ந்து செய்தோம். திருமணத்திற்கு பிறகு சுமார் 8 மாதங்கள் எதிர்மனுதாரர் வேலை செய்த பெங்களூருவில் நாங்கள் வசித்தோம். பெங்களூருவில் வசிக்கும்போது எதிர்மனுதாரர் என்னை வேலைக்கு செல்லச்சொல்லி எதுவும் சொல்லவில்லை. ஆனால், நாங்கள் பிரியும்போது நான் வேலைக்கு செல்லவேண்டுமென்று கூறினார். நாங்கள் பெங்களூருக்கு குடித்தனம் செல்லும்போது எனது தாயார் வந்தார். அதன்பிறகு அவர் பெங்களூரு வரவில்லை. எனது தம்பி இரண்டு முறை அதாவது எதிர்மனுதாரர் என்னுடன் சண்டையிட்ட போது பெங்களூருக்கு வந்தார். எனது மாமியார் மற்றும் மாமனார் இரண்டு, மூன்று முறை பெங்களூருக்கு வந்திருப்பார்கள். அவர்கள் அங்கு வந்திருந்த சமயம் தங்களது பெரிய மருமகள் போல் நானும் வேலைக்கு செல்லவேண்டும் என்றும் அவ்வாறு செல்லவில்லை என்றால் செலவுக்கு எனது தாயார் தொகை கொடுக்கவேண்டுமென்று கூறினார்கள். எதிர்மனுதாரர் எனது தகப்பனாரிடம் தனது சம்பளபட்டியலை கொடுத்தபோது நான் அதனை பார்த்தேன். அவருடைய சம்பளம் ரூ.45,000/- எனக்கு அது தெரியும். பெங்களூருவிலிருந்து முடிச்சூருக்கு எதிர்மனுதாரர் வேலையை தானாகவே விட்டுவிட்டு வந்துவிட்டார். என்னுடைய வற்புறுத்தலின் பேரில் தான் எதிர்மனுதாரர் பெங்களூரு வேலையை விட்டுவிட்டு முடிச்சூருக்கு வந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னை ஆண் பிள்ளை பெற்றுத்தர சொல்லி வற்புறுத்தினார் என்ற விவரத்தை எனது மாமனார் மற்றும் மாமியாரிடம் நான் சொல்லவில்லை. எனது பெற்றோர் ஆரம்பித்திலிருந்தே முடிச்சூரில் தான் வசித்து வருகிறார்கள். நான்

எதிர்மனுதாரரை முடிச்சூருக்கு வரச்சொல்லி வற்புறுத்தியதால் அவர் பெங்களூரு வேலையை விட்டுவிட்டு முடிச்சூருக்கு வந்தார் என்று சொன்னால் சரியல்ல.

**(எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- S.Selva Sundari
Principal District and Sessions Judge,
Tiruvallur.